உ

தெய்வமேதுணை.

அகஸ்தியரருளிச்செய்த

# பாலகிரகதோஷ

பரிகாரக்கண்ணாடி.

இஃது,

சிறுமணவூர்

முனிசாமி முதலியாரால்

இயற்றப்பட்டு,

தமது

சென்னை சூளை

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1908.

53

# நூதன புத்தக விளம்பரம்.

| | |
|---|---|
| சுதேச கைத்தொழில் சாஸ்திரம், விலை ரூபா | 1 0 0 |
| சுகந்த பரிமள சாஸ்திரம் | 0 8 0 |
| சிவசொரூபசாஸ்திரம் | 0 8 0 |
| சரீரசாஸ்திரம் | 0 8 0 |
| விவாக சாஸ்திரம் | 0 8 0 |
| சகுனசாஸ்திரம் | 0 4 0 |
| ருதுஜெனனசாஸ்திரம் | 0 4 0 |
| நஷ்டஜாதகம் | 0 8 0 |
| நவகண்ட ஆரூடம் | 0 8 0 |
| பதிவிரதைகள் சரித்திரம் | 0 12 0 |
| உலகவிசித்திரக்கதை | 1 0 0 |
| இங்கிலீஷ் தமிழ் வைத்திய சிகாமணி | 3 0 0 |
| பிரபஞ்ச உற்பத்தி | 2 0 0 |
| சண்டாளர் சகவாசம் | 0 8 0 |
| வேதாந்த ஜட்ஜ்மெண்ட் | 1 0 0 |
| குடும்ப சனியனென்னும் அகடவிகட சம்சாரி | 0 4 0 |
| ருஷியா ஜப்பான் யுத்தம் | 0 4 0 |
| வியாசர்விபரீதம் | 0 4 0 |
| கண்கட்டுவித்தை 1000 | 0 10 0 |
| காமீதர்கலகம் | 0 6 0 |
| ஷை 2-ம் பாகம் | 0 4 0 |
| தெய்வகுணவெளிச்சம் | 0 8 0 |
| இந்தியா சமையல் சாஸ்திரம் | 0 8 0 |
| நூதன கலியாணப்பாட்டு | 0 4 0 |
| போலீசு ஆக்ட்டு | 0 4 0 |
| தேவஸ்தான ஆக்ட்டு | 0 4 0 |
| ஸ்டாம்பு ஆக்ட்டு | 0 8 0 |
| 8-வது ஆக்ட்டு | 0 8 0 |
| சாட்சி ஆக்ட்டு | 0 12 0 |
| தஸ்தாவேஜு ஆக்ட்டு | 1 4 0 |
| இந்தியன்பினல்கோட்டு | 3 0 0 |
| கிராம முனிசிப் கோட்டு | 3 0 0 |
| இந்துலா | 2 0 0 |

இப்படிக்கு.

சி. முனிசாமி முதலியார் கம்பெனி,

பெரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு, மதராஸ்.

உ

கடவுள் துணை.




# பாலகிரகதோஷ

## பரிகாரக்கண்ணாடி.

காப்பு விருத்தம்.

புத்திரப்பேரில்லாமல் கவலைகொண்ட
புண்ணியர்கள் மனக்குறையைச்சொல்லொணு
சத்திரங்கள்சாவடிகள் தண்ணீர்ப்பந்தல்
சாலைபலசோலைகுளங் கோயில்கட்டி
எத்தனையோ தவமிருந்து நதிகளாடி
இடமெழுதியுண்டுபல விரதங்காத்து
புத்திரனையீன்றெடுத்து வளர்க்குங்காலை
பொல்லாதகிரகதோஷம் பிடிக்கும்பாரே.

ஒண்ணுனவருஷமுதல் குழந்தைகட்கு
ஒண்டிருந்துதொத்துமடா கிரகதோஷந்தான்
எண்ணுமல்பலபலவாய் நினைவுகொண்டு
ஏலாதவைத்தியங்கள் செய்துகேட்டு
கண்ணுனபிள்ளைகட்கு மருந்தையீந்து
கைசோறுமானிடர்க்கு சஞ்சீவித்தான்
விண்ணவர்க்குத்தற்பொருளாய் விளங்குகின்ற
விநாயகனன்னடிதொழுது விளம்புவேனே.



சிசுபிறந்த முதல்நாள் முதல்மாசம் முதல்வருஷம்
தாட்சிவாட்சியென்னும் பெயர்தரித்த
மோகனாங்கிதேவதைவந்தணுகும்.

வாந்திபண்ணும் சுரமடிக்கும் பாலுண்ணாது
வளமானதிரேகமெல்லாம் மினுமினுக்கும்
காந்தியாய்கண்ணிரண்டுந் திறவாதப்பா
கழிந்தாக்கால் தண்ணீரைப்போலேவோடும்
போந்தவேபூனைகுரல் போலேஅழும்
பொல்லாதபலவிதமாய் விகாரஞ்செய்யும்
சாந்தியில்லாசகலமாய் கூறிவைத்தோம்
சாஸ்திரத்தின்முறைப்படியே செய்துபாரே

இதற்குப்பரிகாரம்.


ஞாயிற்றுக்கிழமையில் பச்சரிசியுடன் உப்பிட்டுப்பொங்கி தயிர்வார்த்துப்பிசைந்து ஆண்பாவைசெய்து புதுசட்டியில் வைத்து அந்தபாவைக்கு காதோலை கருமணி பஞ்சவர்ணநூல் கருப்புவஸ்திரம் பலவகை புட்பஞ்சூட்டி எள்ளு நெற்பொறி நவதானியம் பஞ்சவர்னசாதம் ஆட்டுக்கறி முட்டை புண்ணாக்குகீரைரொட்டிவஸ்து பழம் தாம்பூலம் தட்சணை இவைகளைச்சுற்றிலும் வைத்து சந்தனந்தெளித்து தூபதீபம் கொடுத்து நிவேதனஞ்செய்து மந்திரம் பாலக்கிரகமோகனாங்கி பாலக்கிரகதோஷநிவர்த்திஜயும் கிலியும் சவ்வுமென்று இப்படி ௧௨-தடவைசெபித்துகுழந்தையை தாயின்மடியில்வைத்து கிரகம் அல்லதுபேயின் பெயரை எழுதாஞ்சொல்லி இருவரையும் ௩-தடவை சுற்றும்போது சொல்லுமந்திரம்.

மூலமந்திரம் ஓம் ஓங்காரமாக அம்மை அதன்தன்னேடும் ஆங்காரமும் ஆயுசும் அதிகமுண்டாகும் சுவாகா

இந்தமந்திரத்தை ௱அ-தரஞ் செபித்து குளக்கரையில் வைக்கவும் இதுவே யிதிலுள்ள பதினாலுக்கும் மூலமந்திரம்.

பின்பு நாயுருவிக்குக்காப்புகட்டி வேர்பிடுங்கி மஞ்சநூல்சுற்றி இதனடியில்கண்டிருக்கும் சக்கரத்தை செப்புத்தகட்டிலெழுதி நூல்சுற்றியவேரை சக்கரத்துள்வைத்துச் சுருட்டி அவல்கடலை தாம்பூலம் புஷ்பம்வைத்து தேங்காயுடைத்து தூபதீபம் கொடுத்து நிவேதனஞ்செய்து இந்த மந்திரத்தை ஜெபிக்கவும்.

அரி அரி சிவ சிவா அரி·ஓம் சிவாஇப்பிள்ளைக்கு சகலதோஷங்களும் நிவாரணமாக ௱அ உருஜெபித்து குளிசத்திற்குமூன்று வருண நூல்சுற்றி குழந்தைகட்குகட்ட சகலதோஷம் நிவர்த்தியாகும்.




சிசுபிறந்த இரண்டாநாள் இரண்டாமாசம்
இரண்டாம்வருஷம் வைத்திரிநீலகண்டியென்னும்
பெயரைத்தரித்ததுற்கையானது வந்தணுகும்.


அதின்குணம்.

இரண்டானவருடத்தின் பாலனுக்கு
இளைக்கின்றவருத்தங்கள் யென்னசொல்வேன்
வயிருப்பும் தலைச்சாயும் பேதியாகும்
வாந்திபண்ணும் தேரையைப்போல் மெலிந்துபோகும்
மிரளுமது அலறியழும் கண்சிவக்கும்
மேனியெல்லாம்வேர்வைவிழும் கொட்டாவித்தான்
சுரமடிக்கும் வயிரிறையும் திடுக்கிட்டுத்தான்
துள்ளியழும் பொல்லாததோஷத்தாலே

## இதற்குப்பரிகாரம்.

திங்கட்கிழமையிலே அரிசியுடன் தும்பயிலைபோட்டுச் சமைத்து கறியில் குப்பைமேனியிலைபோட்டு வேகவைத்துஇரண்டையும் ஒன்றாகசேர்த்து வெள்ளாட்டுப்பால்விட்டுப் பிசைந்து ஆண் பாவைபண்ணி புதுச்சட்டியில்வைத்து காதோலை கருமணி பஞ்சவருணநூல் பட்டுவஸ்திரஞ்சாற்றி தாமரைப்பூசூட்டி எள்ளு வெல்லம் பச்சரிசி தாம்பூலம் தட்சணைவைத்து நவதானியம் சாதம் கோழிமுட்டை கச்சகருவாடு வடை சுண்டல் அவல்கடலை புண்ணாக்குகீரை கள்ளுசாராயம்பழம் தேங்காய்ரொட்டிசுருட்டுஇவைகளை பாவைச்சுற்றிலும்வைத்து நெய்யினால் ஐந்துதிரி கொளுத்திவைத்து மஞ்சள்துணியில் அரைக்காசுமுடித்து பாவைக்கெதிரில் வைத்துநெய்யினால்ஐந்துதிரிகொளுத்திவைத்து மஞ்சள்துணியில் அரைக்காசுமுடித்து பாவைக்கெதிரில்வைத்து தூபதீபம்கொடுத்து நிவேதனஞ்செய்து குழந்தையை தாயின்மடியில்வைத்து கிரகத்தின்பேரை ௧௧-தரஞ்சொல்லி பெட்டைக்கோழிசுற்றி மந்திரம் ஓம் ஸ்ரீயும்பாலக்கிரகதோஷம் நிவர்த்தி ஐயும் கிலியும் சவ்வுமென்று இந்தப்படி ௧௨-தடவை செபித்து இருவருக்கும் பாவையெடுத்து ௯-தடவைசுற்றி முன்சொல்லி மூலமந்திரத்தை ௱௮ ஜெபித்து இரவில் ௭-மணிக்கு பைரவன் கோயில்பக்கம் வைக்கவும்.

பின்புவேளைக்கு காப்புகட்டி வேர்பிடுங்கிவந்து இதனடியிற் கண்டிருக்கிற சக்கரத்தை செப்புத்தகட்டிலெழுதி வேரைத்தகட்டினுள் வைத்துச்சுருட்டி மூன்றுவர்ணநூல் சுத்திவைத்து தாம்பூலம் புஷ்பம் பழம் அவல்கடலைவைத்து தேங்காயுடைத்து தூபதீபங்கொடுத்துச் சொல்லு மந்திரம்.




அரிஓம் தன்மதேவர் தாரணியளந்தநம்பி நீலகண்ட மாயா சொரூபா சர்வதோஷமும் படுபடு ரூங் சூரூங்கு மசிமசிநமசிவாய

சிவாவென்று ௱அ-உரு ஜெபித்து குளிசத்தை வலதுபுறத்திற்கட்டசகல தோஷமும் நிவர்த்தியாகும்.

சிசுபிறந்த மூன்றுநாள் மூன்றுமாசம் மூன்றுவருஷம்
விரோதகன்னியெனும் காளிதேவதை வந்தணுகும்

இதின்குணம்.


கண்களிலேபீளையது சேரும்நெஞ்சு
கனல்போலேயெரியுமப்பா பாலுண்ணாது
கண்சோறும்வெளுப்பாக பேதியாகும்
கல்போலேவயிருப்பும் தலையைச்சுற்றும்
எண்ணவேகயர்போலே உடல்முறுக்கும்
யிளைப்புமிகவுண்டாகும் சுரமடிக்கும்
பண்ணாதகோலமெல்லாம் பண்ணுமப்பா
பாலருக்குமூன்றுவ தாண்டிற்றுனே.

இதற்குப்பரிகாரம்.

சோமவாரத்தில் குடுவையரிசிச்சோறு கருவாடு நெற்பொரி பொரிமாவு இவைகளை [illegible]சந்து பெண்பாவைசெய்து புதுசட்டியில்வைத்து காதோலை கருமணி சந்தனம் கதம்பம் பஞ்சவருணநூல் செகப்பு வஸ்திரஞ்சாத்தி மந்தாரைபுட்பஞ்சூட்டி சாதம்புண்ணாக்கு அரைக்கீரைபுரட்டல் கருவாடு அவல்கடலை சுண்டல் முட்டை ரொட்டிசுருட்டு வஸது இவைகளை பாவைச்சுற்றிலும் வைத்து மஞ்சள் துணியில் கூ-காகமுடித்துகரும்புபெட்டைக்கோழி காவுகொடுத்து தேங்காய்பழம் தாம்பூலம் தட்சணை தூபதீப நிவேதனஞ் செய்து மந்திரம் ஓங்காளி பாலக்கிரகதோஷநிவர்த்தி ஓம் ஆம் உம் ஐயும் கிலியும் சவ்வும் சர்வகிரகதோஷம் நிவர்த்தியென்று கசு-தடவை ஜெபித்து கொடிக்கள்ளி ந-கிளையுள்ளதில் நெய்த்திரிசுற்றி தீபமேற்றி கிழக்குமுகமாக தாயின்மடியில் குழந்தையைக்குந்தவைத்து கிரகத்தின்பெயரைச்சொல்லி மூலமந்திரம் ௱அ-தரஞ்செபித்து பாவையெடுத்து கூ-தடவை இருவரையுஞ்சுற்றி மாலைநேரத்தில் ஊருக்குமேற்கு சோலைக்கெதிரில் வைக்கவும்.

பின்பு முருங்கைக்குக் காப்புகட்டி சிவ வங் ஓங் நகரிங்யென்று வேர்பிடிங்கிவந்து இதனடியில் கண்டிருக்கும் சக்கரத்தை செப்புத்தகட்டிலெழுதி வேரேவைத்துச்சுருட்டி புஷ்பஞ்சூட்டி அவல்கடலை பழம் தாம்பூலம் தட்சணைவைத்து தேங்காயுடைத்து தூபதீபம் கொடுத்துச்சொல்லும்.

மூலமந்திரம் ஓம்அர சிவா ஓம்சிவாய அகோரகோர தந்தரூபா உடம்புகுளிர சர்வதோஷமும் பரிகரி படுபடுபட்சிபடுசிவாவென்று ௱அ-ஜெபித்து குளிசத்திற்கு மஞ்சள்நூல்கற்றி குழந்தைக்கு வலது புரத்திற்கட்டவும்.




சிசுபிறந்தநாலாநாள் நாலாமாதம் நாலாம்வருஷம்.

உருத்திரகாலாக்கினியென்னும் பைரவிதேவதை

வந்தணுகும் அதின்குணம்.


தேங்காய்பூசிதறினாற்போல் பேதியாகும்
 தாயாரைகைவிடா தழுதிருக்கு[illegible]
பாங்கானதிரேகமெல்லாம் சிலிசிலி[illegible]கும்
 பாலனுக்குவாய்தனிலே நுரையுந்தள்ளும்
வேங்கியழும்வயருப்பும் சுரமடிக்கும்
 இரண்டுவிலாசுழித்திருக்கும் நடுக்கும்தேகம்
வாங்காமல்கைகால்கள் சுருக்கிக்கொண்டு
 வலிக்குமடாஉச்சியது துடிக்கும்பாரே.

இதற்குப்பரிகாரம்.

மங்களவாரத்தில் உளுந்தமாவுஞ்சோறும் பசுநெய்விட்டுப் பிசைந்து பெண்பாவைசெய்து புதுசட்டியில்வைத்து காதோலை கருமணிபஞ்சவர்ணநூல் பச்சைவஸ்திரம்சாத்தி வெள்ளெருக்கம் பூசூடி சாதம் ஆட்டுக்கறிபுரட்டல் அரிசிரொட்டி நெற்பொறி நவதானியம் புண்ணாக்குகீரை நெத்திலிகருவோட்டின்தலை கோழிமுட்டை கள்ளு சாராயம் சுருட்டு தேங்காய் பழம் தாம்பூலம் தக்ஷிணைவைத்து குங்குமம் கதம்பம் ௯-காசு அவயவங்களில்வைத்து தூபதீபம்கொடுத்து நிவேதனஞ்செய்து புள்ளிசாவல் விபூதிகொடுத்து வடக்குமுகமாகதாயார்மடியில் குழந்தையைக் குந்தவைத்து மந்திரம் ௱௮-ஜெபித்து மந்திரம் ஓம்பாலக்கிரக பயிரவி ஓம் ஆம்-ஸ்ரீயும்-கிரியும்-ஐயும்-கிலியும்-சவ்வும்- சர்வபாலகிரகதோஷ நிவர்த்தியென்று ௧௮-தடவை ஜெபித்து பாவையை ௯-தடவை இருவரையுஞ்சுற்றி உச்சிநேரத்தில் சுடுகாடு அல்லது ஆற்றங்கரையில் கொண்டுபோய்வைத்து பாவையின்வாயில் கள்ளை ஊற்றிவிட்டு வரவும்.

பின்புநத்தைச்சூரிக்குக் காப்புகட்டி சிவயநமவென்று வேர்பிடுங்கிவந்து யிதனடியிற்கண்டசக்கரத்தை செப்புத்தகட்டிலெழுதி வேவா அதனுள்வைத்து சுருட்டி மஞ்சள்நூல்சுற்றி வைத்து புஷ்பம்தாம்பூலம் தக்ஷிணபழம் அவல்கடலைவைத்து தேங்காயுடைத்து தூபதீபங்கொடுத்து சொல்லுமந்திரம்.

அரிஓம்சிவாயநம சடசட பிறபிற அகோரவீரபத்திரா வாவா இப்பிள்ளைக்கு சகலதோஷமும் உடம்படுசுவாகாவென்று ௱அ-தரம்செபித்து குழந்தைக்குச்செய்ய சகலதோஷம் நிவர்த்தியாகும்.




சிசுபிறந்தஐந்தாநாள் ஐந்தாமாசம் ஐந்தாம்வருஷம்
ஆகாசபாதிரமென்னும் ஜின்னுதேவதை
வந்தணுகும் இதின்குணம்.

ஐந்தானவருடத்தில் கொடியதோஷம்
அப்பனேகுரல்கம்மி யழுகும்பாலன்
மந்தமாம்வயிருப்பும் பாலுண்ணாது
மலமெல்லாம்பலவிதமாய் கழியும்பாரு
விந்தையாய்விலாவெலும்பு வுயர்ந்திருக்கும்
வேகமாய்சுரமடிக்கும் வயர்சுரக்கும்
தொந்தமாய்கரப்பான்போல் சிரங்குகாணும்
தொந்தனைகள் பலவிதமாய் ஐந்தாமாண்டே.


இதற்குப்பரிகாரம்.

ஆதிவாரத்தில் பச்சரிசிமாவில் பசும்பால் ஊற்றிப்பிசைந்து பெண்பாவைசெய்து காதோலைகருமணி பஞ்சவர்ணநூல் மஞ்சள்வஸ்திரம் புதுச்சட்டியில்வைத்து எருக்கம்பூ சூடி பொங்க

விட்டு வெல்லம் நவதானியநெற்பொரி தாம்பூலம்புஷ்பம் பழம் செஞ்சாவல் காவுகொடுத்து சுருட்டு அவல்கடலை தேங்காயுடைத்து தூபதீபங்கொடுத்து நிவேதனஞ்செய்து குழந்தையைதாயின்மடியில் வடக்குமுகமாகவைத்து எலுமிச்சம் பழமறுத்து இருவரையுஞ்சுற்றி சட்டியிலிட்டு மூலமந்திரத்தை ஜெபித்து ஓம்ஜின் னுசகலபாலகிரகதோஷம் நிவர்த்தியென்று ௱க தடவை ஜெபித்து கிரகத்தின்பெயர்சொல்லி பின்புபாவைபெடுத்து கூ-தடவை இருவரையுஞ்சுழற்றி மாலைநேரத்தில் பிடாரிகோவில் பக்கத்தில்வைக்கவும்.

பின்பு ஒரிலைதாமரைக்குக்காப்புகட்டி மகிநயவவென்றுவேர்பிடுங்கிவந்து இதனடியில்கண்டிருக்குஞ் சக்கரத்தை செப்புத்தகட்டிலெழுதி வேரைவைத்துச்சுருட்டி புஷ்பஞ்சூடி அவல் கடலைபழம் தாம்பூலம் தட்சணைவைத்து தேங்காயுமுடைத்து தூபதீபங்கொடுத்துச்சொல்லும் மந்திரம்.

ஓம்*நீலிகபாலி திரிசூலி - சண்டாளி-அரிஓம் - இப்பிள்ளை தோஷம் இரங்கிபடுசுவாகா சிவாவென்று ௱அ ஜெபித்து குளிசத்தை குழந்தைக்குக்கட்ட சகலதோஷம் நிவர்த்தியாகும்.




குழந்தைபிறந்தஆறுநாள் ஆறுமாதம் ஆறும்வருஷம்
வைத்திரியென்னும்பெயர்தரித்த கன்னிதேவதை
வந்தணுகும் அதின்குணம்.

கால்வீங்கும்சொக்கிருக்கும் உடல்வெளுக்கும்
கழுத்துமுதல்முகமெல்லாம் வேர்வைகாணும்
பாலதனைவேண்டாது தாகங்கேட்கும்
பாலனுக்குமுதுகெலும்பு நிமிர்ந்துபோகும்


சாலவேசுரமடிக்கும் விலாவெலும்பு
சதைக்குமேல்காக்குமடா வயருவீங்கும்
நாளைக்குஒருவியாதி போலேகாட்டும்
நம்பாதேசாந்தியுடன் செய்துநீக்கே

இதற்குப்பரிகாரம்.

ஆதிவாரத்தில் அரைத்தமஞ்சள்சோறு தூதுவேளையினிலை இலுப்பைப்புண்ணுக்கு இவைகளைப்பிசைந்து ஆண்பாவைசெய்துபுது சட்டியில்வைத்து காதோலைகருமணி சந்தனங்கதம்பம் பஞ்சவருணநூல் கருப்புவஸ்திரஞ்சாற்றி மந்தாரைபுஷ்பஞ் சூட்டி சாதம்புண்ணுக்கு அரைக்கீரைபுரட்டல் கருவாடு அவல் கடலை சுண்டல் முட்டை ரொட்டி சுருட்டுவஸ்து இவைகளைப் பாவைச்சுற்றிலும்வைத்து மஞ்சள் துணியில் கூ-காசு முடிந்து வைத்து கருப்புபெட்டைக்கோழி காவுகொடுத்து தேங்காய் பழம் தாம்பூலம்தக்ஷணை தூபதீபநிவேதனஞ்செய்து மந்திர ஓங்காளி பாலக்கிரகதோஷநிவர்த்தி ஓம் ஹ்ம் உம் ஐயுங்கிலியு சவ்வும் சர்வகிரகதோஷ நிவர்த்தியென்று ககூ தடவைசெபித்து கொடிக்கள்ளி ௩-கிளையுள்ளதில் நெய்த்திரிசுற்றி தீபமேற்றி கிழக்கு முகமாகதாயின்மடியில் குழந்தையைக் குந்தவைத்து கிரகத்தின்பெயரைச் சொல்லிமூலமந்திரம் ௱அ தரஞ்செபித்து பாவையெடுத்து கூ-தடவை இருவரையுஞ்சுற்றி மாலைநேரத்தில் ஊருக்குமேற்கு சோலைக்கெதிரில் வைக்கவும்.

பின்புகுப்பைமேனிக்குக் காப்புகட்டி வேர்பிடுங்கி மஞ்சள் நூல்சுற்றி இதனடியில்கண்டிருக்குஞ் சக்கரத்தை செப்புத்தகட்டிலேழுதிநூல்சுற்றியவேரை சக்கரத்துள்வைத்து சுருட்டி அவல்கடலைதாம்பூலம் புஷ்பம்வைத்து தேங்காயுடைத்து தூபதீபுங்கொடுத்து நிவேதனஞ் செய்து இந்தமந்திரத்தை ஜெபிக்கவும்.

அரிஅரி காலதூதா எம்தூதா ஓம் இப்பிள்ளைக்கு சகல தோஷங்களும் நிவாரணமாக ௱அ உருஜெபித்து குளிசத்திற்கு மூன்றுவருணநூல்சுற்றி குழந்தைக்குகட்ட சகலதோஷம் நிவர்த்தியாகும்.



குழந்தைபிறந்தஏழாநாள் ஏழாமாசம் ஏழாவருஷம்
உருத்திரகாளரியென்னு மாரியம்மை
வந்தணுகும் அதின்குணம்.


குரல்கம்மியழுகுமடா சுரமுங்காணும்
குழந்தைக்கிஉச்சியது பள்ளமாகும்
புருவமது துடிக்குமடா கண்ணீர்வடியும்
பூமியிலேபுரண்டழுகும் மிரண்டுப்பார்க்கும்
திரேகமது பச்சைநிறமாகக்காட்டும்
திரண்டயிரு புருவமது துடிக்கும்பாரு
சிறந்ததொருபிள்ளைக்கு ஆறுமாண்டின்
செய்யுமாயிந்தவிஷ தோஷமெல்லாம்

இதற்குப்பரிகாரம்.

மங்களவாரத்தில் பச்சரிசிமாவால் பெண்பாவை செய்து புதுசட்டியில்வைத்து தோலை கருமணி பஞ்சவர்ணநூல் கருப்புவஸ்திரம்சாத்தி வெள்ளெருக்கம்பூசூட்டி சாதம் கருப்புபெட்டைக்கோழி எருக்கம்பூ ஆட்டுக்கறிபுரட்டல் அரிசிரொட்டி நெற்பொரி நவதானியம் புண்ணாக்குக்கீரை நெத்திலி கருவாட்டின்தலை கோழிமுட்டை கள்ளுசாராயம் சுருட்டு தேங்காய்பழம் தாம்பூலம்தட்சணை வைத்து குங்குமம் கதம்பம் கூ காசு அவயவங்களில்வைத்து தூபதீபம்கொடுத்து நிவேதனஞ் செய்து புள்ளிசாவல் ஆகூதிகொடுத்து வடக்குமுகமாக தாயார் மடியில் குழந்தையைக் குந்தவைத்து மந்திரம் ௱அ ஜெபித்து மந்திரம் ஓம்பாலக்கிரகபைரவி ஓம்-ஆம்-ஸ்ரீயும்- கிலியும்-ஐயும்-கிலியும் - சவ்வும் சர்வபாலக்கிரகதோஷ நிவர்த்தியென்று கஅ தடவை ஜெபித்து பாவையை கூ-தடவை இருவரையுஞ்சுற்றி உச்சிநேரத்தில் சுடுகாடு அல்லது ஆற்றங்கரையில் கொண்டு போய்வைத்து பாவையின் வாயில்கள்ளை ஊற்றிவிட்டுவரவும்.

பின்புவில்வமரத்திற்கு காப்புகட்டி நமசிவயசிவயமென்று வேப்பிலையும் கோழியிறகும் பெலியிட்டுவேர் பிடுங்கிவந்து இதனடியில் கண்டிருக்குஞ் சக்கரத்தை செப்புத் தகட்டிலெழுதி வேரைவைத்துச் சுருட்டிமஞ்சள்நூல்சுற்றி மஞ்சள்பிள்ளையார் சுத்தி அதற்கெதிரில் குளிசத்தைவைத்து புஷ்பஞ்சூட்டி தாம்பூலம் தட்சணை பழம் அவல்கடலைவைத்து வேப்பிலையரிசியுங் கலந்து ரு மொந்தையில் பொங்கலிட்டுவைத்து தேங்காயுடைத்து தூபங்கொடுத்து சொல்லுமந்திரம்.

ஓம் சிவா இப்பிள்ளைக்கிச் சர்வதோஷமும் படுவென்று ஈஅ தாஞ்செபித்து குழந்தைக்குக்கட்ட சர்வதோஷம் நிவர்த்தியாகும்.




சிசுபிறந்தஎட்டாநாள் எட்டாமாசம் எட்டாம்வருஷம் சுப்பிரமாதங்கியென்றும் பேர்தரித்த பகவதிதேவதை வந்தணுகும் அதின்குணம்.

தலைச்சுழலும்கண்சுழலும் அலர்ந்துபோகும்
தண்ணீர்போற்பேதியாகும் வாந்திபண்ணும்
நிலைதவிரகளைப்புண்டாம் தலையும்சாயும்
நினைக்கவொண்ணாபலவிதமாய் கனவுகாணும்
அலருமடாசுரங்காயும் சிரங்குகாணும்
அப்பனேகண்திறவா திருக்கும்பாரு
பலவிதமாய்இதுபோலே விகாரம்பண்ணும
பாலருக்கு எட்டானவருடந்தானே.


இதற்குப்பரிகாரம்.

சோமவாரத்தில் பச்சரிசியுடன் பால்சோறு பாவற்காய் தயிர்வார்த்துப்பிசைந்து ஆண்பாவைசெய்து புதுசட்டியில்வைத்து அந்தபாவைக்கு காதோலை கருமணி பஞ்சவர்னநூல் கருப்புவஸ்திரம் பலவகைபுட்பஞ்சூட்டி எள்ளு நெற்பொறி நவதானியம் பஞ்சவர்ணசாதம் ஆட்டுக்கறி முட்டை புண்ணாக்குகிளாரொட்டிவஸ்து தாம்பூலம் தட்சணைச் சுற்றிலும்வைத்து சந்தனந்தெளித்து தூபதீபம்கொடுத்து நிவேதனஞ்செய்து மந்திரம் பாலக்கிரகமோகனங்கி பாலக்கிரகதோஷநிவர்த்திஐயுங்-கிலியும் சவ்வுமென்று இப்படி கஉ தடவை ஜெபித்து குழந்தையை தாயின்மடியில்வைத்து கிரகம் அல்லது பேயின்பெயரை எழுதாஞ் சொல்லி இருவரையும் கூ-தடவை சுற்றி ஓம்பகவதி பால கிரக்

தோஷநிவர்த்தியென்று கசூ-தடவை ஜெபித்து இருவரைாயும் சூ தடவைசுற்றி அந்திநேரம் அரன்கோயிலுக்கெதிரில் ஆலமரத் தடியில்வைக்கவும்.

பின்புஊமத்தனுக்குக் காப்புகட்டி நங் மங் சிங் யென்று வேர்பிடுங்கி இதனடியில், கண்டிருக்குஞ் சக்கரத்தை செப்புத் தகட்டிலெழுதி வேரைவைத்துச்சுருட்டி மஞ்சள்நூல்சுற்றிபுஷ் பஞ்சூட்டி தாம்பூலம் பழம் அவல்கடலைவைத்து தேங்காயுடை த்து தூபதீபங்கொடுத்து சொல்லுமந்திரம்.

ஓம் ஆங்காரி வேதாளி சர்வதோஷநாசி இப்பிள்ளை தோஷ ம்பட்சிகஞயா படுபடு வாவாவென்று ௱அ செபித்துகுழந்தைக் குக்கட்ட சகலதோஷ நிவர்த்தியாகும்.




சிசுபிறந்தஒன்பதாநாள் ஒன்பதாம்மாசம் ஒன்பதாம்வருஷம்
குணத்திவாயக்கினியென்னும் பெயர்தரித்த
குடோரிதேவதை வந்தணுகும்
அதின்குணம்.

மஞ்சளாய்பேதியாகும் கண்கள்வீங்கும்
மைந்தனதுகாலிரண்டும் பின்னும்பாரு
கொஞ்சுகின்றமுகமதுதான் வெளுத்துகாணும்
குழந்தையதுநித்திரையது செய்யாதண்ணேன்
துஞ்சவேசுரமடிக்கும் வயர்கடுக்கும்
தூக்குமடாயிரண்டுவிலா உயர்ந்துப்போகும்
அஞ்சாதேயிதற்குள்ளே பரிகாரந்தான்
அடுத்தாப்போலுரைத்திட்டோம் செய்துநீக்கே

## இதற்குப்பரிகாரம்.

ஆதிவாரத்தில்செம்பாளையரிசிச்சோறும்சந்தனமுங்கலந்து பிசைந்து பெண்பாவைசெய்து புதுச்சட்டியிலேவைத்து காதோலைகருமணி பஞ்சவர்ண நூல் சிகப்புவஸ்திரஞ்சாற்றி செவ்வலரிப் புட்பஞ்சூட்டி பழம் அவல்கடலை ரொட்டி வஸ்து சுறுட்டு சாதம்புண்ணுக்குக் கீரை கதம்பப்பொடி தூவி தூபதீபங்கொடுத்து கருப்புசாவல்பலியிட்டு மூலமந்திரம் ௱௮ ஜெபித்து கிரகத்தின்பெயரைச்சொல்லி கிழக்குமுகமாக தாயார்மடியில் குழந்தையைகுந்தவைத்து ௯ காசு அவயவங்களிலும் தாம்பூல தட்சணைவைத்து ஓம் பாலகிரக குடோரி ஐயுங் கிலியும் சவ்வும் பாலகிரகதோஷநிவர்த்தி இப்படி ௩௧ தடவைஜெபித்து பாவையெடுத்து ௯-தடவைசுற்றியிரக்கி அந்திநேரத்தில் மேற்படி திசையில் குளத்துகீழ்கரையில் வைத்து கணபூதமென்றுசொல்லி பாவையின்வாயில் கள்ளுவார்த்துவரவும்.

பின்புமூக்குரட்டைக்குக்காப்புகட்டி ஓம்சிவாயநமவென்று வேர்பிடுங்கிவந்து இதனடியில் கண்டிருக்கும் சக்கரத்தை செப்புத் தகட்டிலெழுதி வேரை அதனுள்வைத்து சுருட்டி பழம் மஞ்சள் நூல்சுற்றி வைத்து வெள்ளைபுட்பஞ்சூட்டி பழம் அவல் கடலை தாம்பூலம்தட்சணைவைத்து தேங்காயுடைத்து தூபதீபங் கொடுத்துச்சொல்லும்மந்திரம்

ஓம் ஆங்காரி வேதவேதாளி சருவபக்ஷணி பிள்ளைதோஷ மட்சணி படுபடு சுவாகாவென்று ௱௮ உருஜெபித்து குளிசத்தை குழந்தைகட்குக்கட்ட சகலதோஷ நிவர்த்தியாகும்.



சிசுபிறந்தபத்தாம்நாள் பத்தாம்மாதம் பத்தாம்வருஷம்.
ஆகஞ்சிகாலாக்கினிதேவியென்னும் பெயர்தரித்த ருத்திரி
தேவதை வந்தணுகும்.


அதின்குணம்.

தேகமேமெலிந்துபோம் பேதியாகும்
திடமானகைகால்கள்வலிபோற்காணும்
வேகமாய்சுரமடிக்கும் முருவேமாறும்
வயர்கடுக்கும் சிலந்தியின்கட்டிகாணும்
சோகமாய்மூர்ச்சையது வந்துமாரும்
சுளுவாககால்கைகள் நோயுண்டாகும்
பாகமாயிதற்குடனே பரிகாரந்தான்
பாட்டின்கீழ்கூறிவிட்டோம்பகர்ந்துகொள்ளே

மங்களவாரத்தில் பச்சரிசி சோறு அவித்தநாணைக்கிழங்கு கறி நெற்பொரி பொரிமாவு இவைகளைச் சேர்த்து பிசைந்து பெண்பாவை பண்ணி புதுசட்டியில்வைத்து காதோலை கருமணி பஞ்சவர்ணநூல் கருப்புவஸ்திரம் சாத்தி சந்தனஞ்செலுத்தி வெள்ளைப்புஷ்பஞ்சூடி அவல்கடலை தாம்பூலம் தக்ஷணைவைத்து சாதம்புண்ணுக்குக்கீரை சுருட்டு வஸ்துபழம் கூ காஸ் முடிந்து வைத்து தேங்காயுடைத்து தூபதீபங்கொடுத்து மூலமந்திரம் ாஅ தரஞ்செபித்து வேற்குமுகமாய் தாயார்மடியில் குழந்தையை குந்தவைத்து மந்திரம் ஓம் ருத்திரஐயுங்கிலியுஞ் சவ்வும் சருவபாலகிரகநிவர்த்தி இப்படி கஉ தடவை செபித்து பாவையெடுத்துகுழந்தைக்கு சு தடவை பேயின்பேரைச்சொல்லி அந்திவேளையில்கிழக்குத் திசையில் வைக்கவும்.

பின்புநிலஆவரைக்குள் காப்புகட்டி ஓஓ ஆஆ சீசீ வைவ்யென்று வேர்பிடுங்கிவந்து இதனடியிற்கண்டிருக்குஞ்சக்கரத்தை செப்புதகட்டாலெழுதி வேரைவைத்துச்சுருட்டி மஞ்சள்நூல் சுற்றிவைத்து புஷ்பஞ்சுற்றி தாம்பூலம் தக்ஷணை பழம் அவல் கடலை தேங்காயுடைத்து தூபதீபங்கொடுத்து மந்திரம்.

அரிஓம் அரகசி அகாரமந்திர ஆங்கோரசுருபா!! அகோர பட்சி இப்பிள்ளைக்குத்தோஷம் படுபடு வாவாவென்று ாஅ ஜெபித்துகுளிசத்தை குழந்தைகட்கு சகல தோஷம் நிவர்த்தியாகும்.




சிசுபிறந்தபதினோராநாள் பதினோராமீ பதினோராம்வருஷ
பஞ்சம்மாதிரிமாகாளியென்னும் பேர்தரித்தஜடாதரி
வந்தணுகும் அதின்குணம்.


அடிக்கடிக்குசுரமடிக்கும் வேர்வைகாணும்
அப்பனேசிகரந்தான் மஞ்சளாகும்
துடிதுடிக்கும்தேகமெல்லாம் வீக்கமாகும்
துகளுமடாநாவதுதான் வரண்டுப்போகும்
கடுகடுக்கும்வெறிகுணங்கள் அதிகமாகும்
கண்டபடிசேஷ்டைசெய்யும் வயர்தானுப்பும்
படித்திட்டதோஷங்கள் நிவர்த்திசெய்து
பாலருக்குஉயிர்கொடுத்து பாதுகாரே

இதற்குப்பரிகாரம்.

சுக்கிரவாரத்தில் எருமைப்பால்விட்ட பச்சரிசிச்சோறும் குறிஞ்சானிலைபோட்டு சதைத்தகறி ஒன்றாகச்சேர்த்துப் பிசைந்து ஆண்பாவைபண்ணி புதுசட்டியில்வைத்து காதோலை கருமணி பஞ்சவர்ணநூல் செகப்புவஸ்திரம் சாத்தி சந்தனஞ்செலுத்தி வெள்ளைப்புஷ்பஞ்சூடி அவல்கடலை தாம்பூலம் தக்ஷிணை வைத்து சாதம்புண்ணாக்குகீரை சுருட்டு வஸ்துபழம் கூ-காஸ் முடிந்துவைத்து தேங்காயுடைத்துதூபதீபங் கொடுத்து மூலமந்திரம் ௱அ தரஞ்செபித்துவடக்கு முகமாய் தாயார்மடியில் குழந்தையை குந்தவைத்து மந்திரம் ஓம் ஜடாதரி ஐவுங்கிலியுஞ் சவ்வும் சருவபாலக்கிரகநிவர்த்தி இப்படி கஉ- தடவை செபித்து பாவையெடுத்துகுழந்தைக்கு கூ-தடவை பேயின் பேரைச்சொல்லி அந்திவேளையில் நாலுசந்துகூடும்படியான அரசமரத்தடியில் வைக்கவும்.

பின்புஎருக்கஞ்செடிக்கு காப்புகட்டி ஓஓஆஆசுவாகாவென்றுவேர்பிடிங்கிவந்து இதனடியிற்கண்டிருக்குஞ்சக்கரத்தைசெப்புத் தகட்டிலெழுதி வேரைவைத்துச்சுருட்டிமஞ்சள் நூல்சுற்றிவைத்து புஷ்பஞ்சுற்றி தாம்பூலம் தக்ஷணைபழம் அவல்கடலைதேங்காயுடைத்து தூபதீபங்கொடுத்து மந்திரம்.

அரிஓம் அரகசி அகாரமந்திர மாகாளி சத்திரூபாயம்மேஐயுங்கிலியும் சவ்வும் இப்பிள்ளைக்குத்தோஷம் படுபடு வாவாவென்று ௱அ செபித்து குளிசத்தை குழந்தைக்குகட்ட சகலதோஷம் நிவர்த்தியாகும்.




சிசுபிறந்தபனிரண்டாநாள் பனிரண்டாமீ பனிரண்டாவரு
அரக்கிஉச்சங்கியென்னும்பெயர்தரித்த நீலிதேவதை
வந்தணுகும் அதின்குணம்.


கண்வலையும்வாந்திபண்ணும் கொடிபோல்துவளும்
கதிரவன்போல் காயுமடாவிக்கல்காணும்
தண்ணியதுகேட்குமடா பேய்போல்திரியும்
தவளைசொரிபோலுடலில் சிரங்குகாணும்
யெண்ணைபோல்திரேகமெல்லாம் மினுமினுக்கும்
யிளவலாய்மஞ்சளைப்போல் பேதியாகும்
பன்னிரண்டாம்வருஷத்தின் தோஷஞ்சொன்னேன்
பக்குவமாய் பரிகாரஞ்செய்துநீக்கே.

## இதற்குப்பரிகாரம்.

சோமவாரத்தில் பச்சரிசிமாவில் பசும்பால் ஊற்றிப்பிசைந்து ஆண்பாவைசெய்து காதோலை கருமணி பஞ்சவர்ணநூல் பச்சைவஸ்திரம் புதுச்சட்டியில்வைத்து வேப்பிலையுஞ்சூடிபொங்கலிட்டு பருத்திக்கொட்டை நவதானியநெற்பொரி தாம்பூலம் புஷ்பம் பழம் செஞ்சாவல் காவுகொடுத்து சுருட்டு அவல்கடலை தேங்காயுடைத்து தூபதீபங்கொடுத்துநிவேதனஞ்செய்து குழந்தையைதாயின்மடியில் வடக்குமுகமாகவைத்து எலுமிச்சம் பழமறுத்து இருவளையுஞ்சுற்றி மூலமந்திரத்தை ௱அ செபித்து மந்திரம் ஸ்ரீயும் கிலீயும் ஐயும் சவ்வும் சகலபாலகிரதோஷம் நிவர்த்தியென்று கஅ தடவைசெபித்து கிரகத்தின் பெயர்சொல்லி கூ-தடவை இருவளையுஞ்சுற்றி இரவில் எ மணிக்கு ஊருக்குவடக்கு ௩-சந்து கூடுமிடத்தில் வைக்கவும்.

பின்பு வட்டக்கிலுகிலுப்பைக்குக் காப்புகட்டி ஓம்-சிங்-உ-உ-சி-சி-அ-வென்றுவேர் பிடுங்கிவந்து இதனடியில்கண்டிருக்குஞ் சக்கரத்தை செப்புத்தகட்டிலெழுதி வேளைவைத்துச்சுருட்டி புஷ்பஞ்சூட்டி-அவல்கடலைபழம் தாம்பூலம் தட்சணைவைத்து தேங்காயுடைத்து தூபதீபங்கொடுத்துச் சொல்லும் மந்திரம்.

ஓம் நீலிகபாலி ஆம்-தேவி திரிபுரமாங்காளி சிவாநந்தி அம்மேதாயே இப்பிள்ளைதோஷம் இரங்கிபடுகொய்யாசிவாவென்று ௱அ செபித்து குளிசத்தை குழந்தைக்குக்கட்ட சகலதோஷம் நிவர்த்தியாகும்.



### சிசுபிறந்தபதிமூன்றுநாள் பதிமூன்றும்மீ பதிமூன்று௵ உச்சங்கியென்னும் பெயர்தரித்த பிடாரி தேவதை வந்தணுகும் அதின்குணம்.


பார்த்தவர்கள்பயித்தியங்கள் யென்றேசொல்லி
பண்ணுமடாகுணங்களெல்லா மாறிப்போகும்
காத்திருந்துஜன்னியென்ற தோஷந்தொத்தும்
கண்ணிரண்டில்ஒருபார்வை மறைந்துபோகும்
தேர்த்துவிடும்பேதியாகும் வெதுப்புண்டாகும்
விதவிதமாய்பலபலவாய் விகாரஞ்செய்யும்
போத்தெறிந்து பதின்மூன்றுவருஷமென்று
பக்குவமாய்பரிகாரம் பாகஞ்செய்யே.

### இதற்குப்பரிகாரம்.

மங்களவாரத்தில் பச்சரிசிமாவால்பெண்பாவைசெய்துபுது சட்டியில்வைத்து காதோலை கருமணி பஞ்சவர்ணநூல் கருப்பு வஸ்திரம்சாத்தி வெள்ளெருக்கம்பூசூட்டி சாதம் கருப்புபெட்டைக்கோழி எருக்கம்பூ ஆட்டுக்கறிபுரட்டல் அரிசிரொட்டிநெற்பொரி நவதானியம் புண்ணாக்குக்கீரைநெத்திலிக்கருவாட்டின்தலை கோழிமுட்டை கள்ளுசாராயம் சுருட்டு தேங்காய்பழம்தாம்பூலம் தட்சணை வைத்து தூபதீபம்கொடுத்து நிவேதனஞ்செய்து புள்ளிசாவல் ஆபூதிகொடுத்து வடக்குமுகமாக தாயார்மடியில் குழந்தையைக் குந்தவைத்து மந்திரம் ௱அ-ஜெபித்து மந்திரம் ஓம்பாலக்கிரகபைரவி ஓம்-ஆம்-ஸ்ரீயும்-கிலியும்-ஐயும்-கிலியம்-சவ்வும்சர்வபாலக்கிரகதோஷநிவர்த்தியென்று கஅ-தடவை செபித்து பாவையை கூ-தடவை இருவரையுஞ்சுற்றி உச்சிநேரத்தில் ஊருக்குவடபுறத்தில் மாடுகட்டும் கொட்டாயிக்கெதிரில் வைக்கவும்.

பின்பு வட்டக் கிலுகிலுப்பைக்குக் காப்புகட்டி நங் மங் சிங் யென்று வேர்பிடுங்கி இதனடியில் கண்டிருக்குஞ் சக்கரத்தைசெப்புதகட்டிலெழுதிவேரே வைத்துச்சுருட்டிமஞ்சள் நூல் சுற்றி புஷ்பஞ்சூட்டி தாம்பூலம் பழம்அவல்கடலைவைத்து தேங்காயுடைத்து தூபதீபங்கொடுத்து சொல்லுமந்திரம்.

அரிஓம் ஆங்காரி சிவாசிவாவென்று ௱அ-செபித்து குழந்தைக்குக் கட்டசகலதோஷம் நிவர்த்தியாகும்.



சிசுபிறந்தபதினாலாம்நாள் பதினாலாம்௴ பதினாலாம்௵
மாடனென்னும்பெயர்தரித்த உக்கிரவீரன்
வந்தணுகும் இதின்குணம்.


வயற்றுநோயுண்டாகும் குளிருங்காயும்
வாய்வுதான் அதிகரித்து பேதியாகும்
நோய்கண்டபிள்ளையைப்போல் மெலிந்துபோகும்
நிலையாதுபலவிதமாய் பேதியாகும்
யயித்தியம்பிடித்தவர்போல் அலையவேண்டாம்
பதினான்காம்வருடத்தின் தோஷங்கண்டால்
வயித்தியங்கள்செய்துடலை கெடுக்கவேண்டாம்
வளமானபரிகாரஞ் செய்துநீக்கே.

இதற்குப்ப்ரிகாரம்.

சுக்கிரவாரத்தில் எருமைத்தயிர்வார்த்தசோறு நாய்க்சீரகம் வழுதலங்கத்திரிக்காய் சமைத்து இவைகளைப் பிசைந்து ஆண் பாவைசெய்து புதுச்சட்டியிலேவைத்து காதோலை கருமணி பஞ்சவர்ணநூல் வெள்ளைவஸ்திரஞ்சாற்றி செவ்வலரிப்புட்பஞ் சூட்டி பழம் அவல்கடலை ரொட்டிவஸ்து சுருட்டு சாதம் புண்ணுக்குக்கீரை கதம்பப்பொடி தூவிமதுமாமிசம் கஞ்சா ஆட்டுக் கறிவைத்து தூபதீபங்கொடுத்துமந்திரம் ஓம் பாலக்கிரககுடோரி ஐயுங் கிலியும் சவ்வும் பாலக்கிரகதோஷ நிவர்த்தி இப்படி ௲-தடவைசெபித்து தாயார்மடியில் குழந்தையைக்குந்தவைத்து கிரகத்தின் பெயரைச்சொல்லி மூலமந்திரம் ௱அ செபித்து பாவையெடுத்து ௲-தடவை சுற்றியிரக்கி அந்திநேரத்தில் முச்சந்தில் வைக்கவும்.

பின்புகுட்டி விளாவுக்குக் காப்புகட்டி சிவயநமவென்று வேர்பிடுங்கிவந்து யிதனடியிற்கண்ட சக்கரத்தை செப்புத்தகட்டிலெழுதிவேனா அதனுள்வைத்துசுருட்டிமஞ்சள்நூல்சுற்றி வைத்து புஷ்பம்தாம்பூலம் தக்ஷிணைபழம் அவல்கடலைவைத்து தேங்காயுடைத்து தூபதீபங்கொடுத்து சொல்லுமந்திரம்.

அரிஓம் சிவாயநம சடசட •பிறபிற அகோரவீரபத்திராவாவா அந்திமாடா உதிரபெலிமாடா ஓம்பட்சி படுசிவாயா நமசிவசிவாவென்று இப்பிள்ளைக்கு சகலதோஷமும் உடம்படுசுவாகாஅ தரம்செபித்து குழந்தைக்குச்செய்ய சகலதோஷம் நிவர்த்தியாகும்.




குழந்தைபிறந்தபதினைந்தாநாள் பதினைந்தாமீ பதினைந்தாவரு
பேய்ச்சியம்மனென்னும்பெயர்தரித்த மயானருத்திரி
வந்தணுகும் அதின்குணம்.

பதினைன்குவருடத்தின் தோஷஞ்சொன்னேன்
பரிகாரம்அதற்குடனே அடுக்காய்சொன்னேன்
விதியாலேமுடிவானல் யாராலுண்டு
வினையிருந்தால்முடிவேது யின்னங்கேளு
பதியாமல்சுரமடிக்கும் பற்கடிக்கும்
பதருமடாநாய்போலே சிதரும்பாரு
ததிவேளைபலவிதமாய் நுழையவேண்டாம்
தக்கபடிபரிகாரம் செய்துநீக்கே.


இதற்குப்பரிகாரம்

ஆதிவாரத்தில் பச்சரிசிமாவில் பசும்பால்விட்டுப் பிசைந்து பெண்பாவைசெய்து புதுசட்டியில்வைத்து காதோலை கருமணி சந்தனங்கதம்பம் பஞ்சவருணநூல்கருப்புவஸ்திரஞ்சாற்றிபச்சரிசி பொங்கலிட்டுயிளநீர்பாணக்கங்கரும்புவெள்ளரிக்காய்பழம்

நெத்திலிமதுமாமிஸம அரைக்கீரைபுரட்டல் கருவாடு அவல்கடலைசுண்டல் முட்டை ரொட்டிசுருட்டு வஸ்து இவைகளைப்பாவைச்சுற்றிலும் வைத்துமஞ்சள் துணியில் கூ-காசு முடிந்துவைத்து கரும்புபெட்டைக்கோழி காவுகொடுத்து தேங்காய்பழம் தாம்பூலம் தக்ஷிணை தூபதீபநிவேதனஞ்செய்து மந்திரஓங்காளி பாலக்கிரகதோஷநிவர்த்தி ஓம் ஆம் உம் ஐயுங் கிலியுஞ் சவ்வும்சர்வகிரகதோஷ நிவர்த்தியென்று கசு-தடவைசெபித்து கிரகத்தின் பெயரைச்சொல்லி தாயின்மடியில் குழந்தையைக்குந்தவைத்து இருவரையுஞ்சுற்றி தூபதீபம்வைத்தவுடன் வேப்பமரத்தடியில் வைக்கவும்.

பின்பு வாசலில் வட்டபாகமெழுகி நெல்போட்டு புதுகலசத்தில் கும்பம்வைத்து வேப்பிலையணிந்து அம்மனைப்போல பாவித்து பலபுஷ்பஞ்சூட்டி சாதம் கறிசமையல்போட்டுஅரைத்தமஞ்சளை குழந்தையைப்போல்செய்து வேப்பிலைசுற்றி சாவல் பலியிட்டு தன் பின்பு திருநீற்றுப்பச்சைச்சுக்காப்புகட்டி நஎலுமிச்சம்பழம்காவுகொடுத்து ஓம் சிங் வங் யென்று வேர்பிடுங்கிவந்து இதனடியில் கண்டிருக்குஞ்சக்கரத்தை செப்புத்தகட்டிலெழுதி வேரை வைத்துச்சுருட்டி மஞ்சள்நூல்சுற்றி புஷ்பஞ்சூட்டி தாம்பூலம் தட்சணை பழம் அவல்கடலைவைத்து தேங்காயுடைத்து தூபங்கொடுத்து சொல்லுமந்திரம்,

அரி அரி மயானருத்திரி பேச்சிவா நமா ஆங்காளிவீரி உத்தண்டபேச்சி சிசுபண்ணியென்று கைகூப்பி சின்னபரச்சாளிஓம் ருத்திரபேச்சிவா நமசிவாயவென்று இப்பிள்ளைக்குசகலதோஷங்களும் நிவாரணமாக ௱அ-உருஜெபித்து குளிசத்திற்குமூன்றுவருண நூல்சுற்றி குழந்தைக்குகட்ட சகலதோஷம் நிவர்த்தியாகும்.




சிசுபிறந்தபதினாறும்நாள் பதினாறும்மீ பதினாறும்வருஷம்
தெய்வகன்னியென்னும் பெயர்தரித்த பாலமோகினி
வந்தணுகும் அதின்குணம்.


பருவமடாபதினாறும் வருடந்தன்னில்
பாலருக்குள்வ்வனமும் அழகுண்டாகும்

சிரசுநோய்காணுமடா திருஷ்டியாலே
சிறுவருக்குமுகம்வெளுக்கும் கைகாலோயும்
அருமையாய்பரிகாரம் செய்துநீக்க
அவனியிலேயாருமே தெரிந்துக்கொள்ள
சிறுமணவூர் முனிசாமி
சிவகாமிவிலாசத்தி லச்சிட்டாரே.

இதற்குப்பரிகாரம்.

சுக்கிரவாரத்தில் உளுந்துமாவில் பெண்பாவைசெய்து புது சட்டியில்வைத்து காதோலை கருமணி பஞ்சவருண நூல்பட்டுவஸ்திரம் சுகந்தமல்லி தவனம் புட்பஞ்சூட்டி பழம் அவல்கடலைரொட்டிவஸ்து பொங்கல் சுண்டல்வடை தோசை பரமானம்சந்தனம் சர்க்கரை வங்காளப்பச்சை துவரம்பருப்பு பச்சரிசி வாசனையுள்ளபுட்பம் தாம்பூலந் தட்சணைவைத்து மந்திரம் ஐயும் கிலியும்சவ்வும் சர்வபாலக்கிரகதோஷ நிவர்த்தியென்று ௱அ ஜெபித்து உகளலுமிச்சம்பழமறுத்து குழந்தைதலைசுற்றி எறிந்துவிடவும்.

மந்திரம்-ஓம் பாலக்கிரக-பாலமோகினி ஐயும் கிலியும் சவ்வும் பாலக்கிரகதேவகன்னி சர்வபாலகிரகதோஷ நிவர்த்தி இப்படி எ தட்டைவ ஜெபித்து ந தடவைசுற்றி ஆற்றங்கரையில் [illegible]க்கவும்.




பின்பு கஞ்சாங்கோரைக்குக் காப்புகட்டி ஓம்சிவாய நமாவென்று வேர்பிடுங்கிவந்து இதனடியில் கண்டிருக்கும் சக்கரத்தைசெப்புத்தகட்டிலெழுதி வேரை அதனுள்வைத்து சுருட்டி பழம் மஞ்சள் நூல்சுற்றி வைத்து வெள்ளைப்புட்பஞ்சூட்டி பழம் அவல்கடலை தாம்பூலம் தட்சணைவைத்து தேங்காயுடைத்து தூபதீபங்கொடுத்துச் சொல்லும் மந்திரம் அரிஓம் ஆங்காரி வேதவேதாளி ஓம் ஜடக்ஷணி பிள்ளைதோஷபட்சணி பாலமோகினி சிசுவதனை உருக்குங்கன்னி ஐயும் கிலியும் படு படுபடு சிஞ்சினபட்சி படுபடுசுவாகாவென்று ௱அ உருஜெபித்து குளிசத்தை குழந்தைக்குக்கட்ட சகலதோஷ நிவர்த்தியாகும்.

பாலக்கிரகதோஷம் முற்றிற்று.